**S.C.No. 371/2019 PW 7** திரு**.** மகாலிங்கம்**.**

நாள் **- 13.08.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு**,** சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரி ஆஜர்**.**

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

அ.சா.1 அருள்செல்வியை எனக்குத் தெரியாது. வழக்கமாக உசிலம்பட்டியில் டீக்கடைகள் இரவு 09.00 மணி, 10.00 மணிக்கு மேல் வைக்கக்கூடாது என்றால் இரவு 11.00 மணி வரையில் வைத்துக் கொள்ளலாம். நான் இரவு நேரங்களில்பணி முடிந்து வீடு செல்வதற்கு சுமார் 1 ½ மணி நேரம் வரை ஆகும். நான் இரவு 12.30 மணிக்கு வீட்டிற்கு சென்றுவிடுவேனா என்றால் சுமார் 01.30 மணியளவில் வீட்டிற்கு செல்வேன். என்னிடம் இருசக்கர வாகனம் இல்லை நடந்துதான் செல்வேன். சந்தன மாரியம்மன்கோவிலுக்கு அருகாமையில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் உண்டு என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கும், என் டீக்கடைக்கும் சுமார் ½ கி.மீ தூரம் வரை இருக்கும். ரவிக்குமார் என்பவர் என்கடையில் வேலைபார்ப்பவர் என்றால் சரியல்ல அவர் என் வீட்டிற்கு அருகாமையில் அரிசிக்கடை ....

வைத்துள்ளார். ரவிக்குமாரும் , நானும் கடந்த 16.09.2015 அன்று சந்தனமாரியம்மன் கோவில் அருகில்வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில்கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். மேலும், போலீசார் எங்களிடம் நடந்த விபரங்களை கூறி வரை படம் வரைந்துள்ளதாகச் சொல்லி எழுதி கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. படம் வரைந்ததாக சொல்லும் தேதிக்கு பின்பு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம் - மகாலிங்கம்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 371/2019
Prosecution Witness PW 14
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ராமகிருஷ்ணன். | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **-13.08.2024.**

எதிரி ஆஜர்**.**

முதல்விசாரணை**-**

நான் தற்போது பொருளாதார குற்றப்பிரிவில் மதுரையில் பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வந்தபோது கடந்த 15.09.2018 அன்று இரவு 11.30 மணியளவில் நான் காவல்நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது மதுரை மாவட்டம், உசிலம்பட்டி மாமரத்துப்பட்டி, சோலை நகர் 1வது தெருவைச்சேர்ந்த அறிவழகன் என்பவரின் மனைவி திருமதி. அருள் செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினைப் பெற்று காவல்நிலையக் கு.எண்.654/2018 U/sec.341. 294(b), 302, 506(ii) IPC ன்படி வழக்கு பதிவு செய்தேன். பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் உசிலம்பட்டி அவர்களுக்கும், ......

சம்பந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களுக்கும் விரைவுத் தபாலாக தலைமைக் காவலர் 1520 திரு. தாதப்பன் அவர்களிடம் கொடுத்தனுப்பினேன். முதல் தகவல் அறிக்கையானது அ**.**சா**.**ஆ**. 11** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

பொதுவாக MLC வழக்குகளில் மருத்துவனையிலிருந்து காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி தகவலானது பொதுவாக மருத்துவமனைகளைப் பொறுத்து தகவல் வரும். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் நாளில் நான் இரவு 08.30 மணியிலிருந்தே காவல்நிலையத்தில்தான் இருந்தேன். பொதுவாக காவல்நிலைய வளாகத்திற்குள் 10 க்கு மேற்பட்ட நபர்கள் இருந்தால் அவர்களிடம் விபரம் கேட்டுத் தெரிந்து கொள்வோமா என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாளில் அ.சா. 1 அருள் செல்வியை நான் இரவு 07.30 மணியிலிருந்து 08.00 மணிக்குள் காவல் நிலைய வளாகத்திற்குள் பார்த்தேனா என்றால் புகார்

கொடுக்கும்போதுதான் பார்த்தேன். புகார் கொடுத்த நபரிடம் காலதாமதத்தை பற்றி கேட்டேனா என்றால் இல்லை. புகார் மனுவில் உள்ளதையே வழக்காக பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு கொடுக்கும்போது புகார் அளிக்க வந்தவரோடு உடன் வந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களைப்பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அறிவேன் என்ற சாட்சி என்ற வகையில் ராஜா என்பவர் கையெழுத்து செய்தார் அவரை மட்டும் விசாரித்தேன். புகார்தாரருடன் ராஜா என்பவரைமட்டுமே நான் பார்த்தேன். மற்ற உடன் வந்தவர்களை நான் பார்க்கவில்லை. இவ்வழக்கின் புகாரை அ.சா. 1 எங்கு வைத்து எழுதினார், அதை யார் எழுதினார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புகாரில் அ.சா.1 அருள் செல்வியும், இவ்வழக்கில் இறந்த அறிவழகன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. வழக்கு சம்பவத்தை பார்த்தவுடன் அ.சா. 1 அருள்செல்வி ஐயோ, அம்மா என அலறி என் கணவரை வெட்டி விட்டார்களே என யாரிடமும் உதவி கேட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 அருள்செல்வி ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்தாரா, .........

இல்லையா என்பதுகுறித்து புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆம்புலன்ஸை வரவழைத்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசேர்த்தோம் என சொல்லப்பட்டுள்ளது. அ.சா.1 ஆம்புலன்சிற்கு போன் செய்து ஆம்புலன்சை வரவழைத்தது பற்றி புகார் மனுவில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 அருள் செல்வி புகார் கொடுக்கும் சமயத்தில் நல்ல மனநிலையில் இருந்துதான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். கடவுச்சீட்டை நான் கொடுத்தாக எனக்கு நினைவில் இல்லை. நிலைய எழுத்தரோ அல்லது நானோ கொடுத்திருக்கலாம். புகாரில் , புகார்தாரர் சொன்னபடி எழுதப்பட்டு எனக்கு படித்துக் காட்டு, சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம் செய்தேன் என எதுவும் எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை. புகார், அ.சா. 1 அருள் செல்வியால் எழுதப்பட்டதா என்றால் எழுத்துமூலமான புகார் அதை அ.சா.1 தான் எழுதினாரா என்று எனக்குத் தெரியாது. புகாரை அ.சா.1 அருள் செல்வி எழுதவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து வழக்கின் தன்மைக்கேற்ப எழுதப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை மறைத்து வழக்கிற்கு ஆதரவாக .......

தயாரிக்கப்பட்ட புகாரில் அ.சா. 1 இடம் வாங்கி கையெழுத்து வாங்கி முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டதென்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒப்பம் - ராமகிருஷ்ணன்

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.